# திராவிட மாடல் அரசு 44

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**








## அறிவுக் கோபுரங்கள்!

‘திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை’ என்பது ஆன்மிகம். ‘திக்கற்றவர்களுக்குக் கல்வியே துணை’ என்பது பகுத்தறிவு. அதனால்தான் ‘மாதா, பிதா, குரு, தெய்வம்’ என்று தெய்வத்துக்கு முன்னால் குருவை வைத்து வணங்கினார்கள். இதிலிருந்தே கல்வியின் முக்கியத்துவத்தை அறிய முடியும்.

திருக்கோயில்கள் மூலமாகக் கிடைக்கும் உபரி நிதியை தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம் 1959- பிரிவு-66(1)ன் கீழ், குறிப்பிட்ட காரணங்களுக்காகப் பயன்படுத்த சட்டப்பிரிவு-36 வழிவகை செய்கிறது. அதனால்தான் பொதுக் கல்வியோடு, ஆன்மிக நெறிகளையும், பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு பள்ளிகளையும் கல்லூரிகளையும் பாடசாலைகளையும் திருக்கோயில் நிர்வாகங்கள் நடத்தி வருகின்றன. இதன் மூலம்,

**‘அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்,**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்,**
**பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்’**

என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு உயிரூட்டுகிறது நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’.

### கழகம் திறந்த புதிய ‘கோயில்கள்’

2021-ஆம் ஆண்டு மே மாதம் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையில் ‘திராவிட மாடல் அரசு’ பொறுப்புக்கு வந்தது. அப்போது இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், புதிதாக 10 கல்லூரிகள் தொடங்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, அக்டோபர் 21 அன்று, முதலமைச்சர் அவர்கள் சென்னை கொளத்தூர் அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியையும், டிசம்பர் 1 அன்று திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம் அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் விளாத்திகுளம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றையும் தொடங்கி வைத்தார்கள். அறிவிக்கப்பட்ட 10 புதிய கல்லூரிகளில் மேற்சொல்லப்பட்ட 4 கல்லூரிகள் தொடங்கப்பட்டுவிட்டன. ஏற்கெனவே, செயல்பட்டு வந்த 5 கல்லூரிகளுடன் தற்போது, மேலும் 4 கல்லூரிகள் என மொத்தம் 9 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

தவிர, இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு, நிதி வசதிமிக்க திருக்கோயில்களிடமிருந்து உபரி நிதியைப் பெற்று, ரூ.10 கோடி அளவிலான ஒரு மூலதன நிதி ஏற்படுத்தப்படும். இந்த நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் திரள் வட்டித் தொகையைக் கொண்டு கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள், கணினிகள், குடிநீர் மற்றும் கழிவறைகள் போன்ற அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### திருக்கோயில் தத்தெடுத்த பள்ளி

புதிய கல்லூரிகளைத் தொடங்கியது மட்டுமல்லாமல், மூடப்பட்ட பள்ளியை மீண்டும் திறந்து நடத்தி வருவது, நம் கழகம் கல்விக்குத் தரும் மரியாதைக்குச் சான்று. சென்னையில் உள்ள காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 32 கிரவுண்டு நிலம், நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் 2021-ஆம் ஆண்டு ஜூன் 13 அன்று திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது.

இந்த இடத்தில் செயல்பட்டு வந்த ‘சீதா கிங்ஸ்டன் ஹவுஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி’ திடீரென்று தனது செயல்பாட்டை நிறுத்திக் கொண்டதால், பள்ளியில் பயின்று வந்த மாணவர்களின் நலனையும், பணிபுரிந்து வந்த ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, நமது முதலமைச்சர் அவர்கள் பள்ளியின் நிர்வாகப் பொறுப்பை, திருக்கோயிலே தன்வசம் எடுத்துக்கொள்ள ஆணை பிறப்பித்தார்.

தற்போது இந்தப் பள்ளி ‘காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி’ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, திருக்கோயிலின் பொறுப்பில் திறம்படச் செயல்பட்டு வருகிறது.

### அனைவரையும் முன்னேற்றும் ஆலயம்!

அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், நமது முதலமைச்சர் உரையாற்றிய போது, “இந்த ஆண்டுப் புதிதாகச் சேரவிருக்கும் மாணவ மாணவிகள் மட்டுமின்றி, இரண்டாம் ஆண்டுத் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளும் கல்விக் கட்டணமின்றிப் பயில ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது” என்று அறிவித்துவிட்டு இப்படிச் சொன்னார்:

“கட்டணமில்லை என்று சொல்வதன் மூலமாக இதனை யாரும் நீங்கள் குறைவாக மதிப்பிட்டுவிடக் கூடாது. கல்வியானது அனைவருக்கும் எளிய முறையில் கிடைத்து, அனைவரும் முன்னேறியாக வேண்டும் என்ற முற்போக்கு எண்ணத்துடன் மாணவ சமுதாயத்தின் மீது இருக்கக்கூடிய உண்மையான அக்கறையின் காரணமாக, இந்த அரசு செய்யக்கூடிய கடமையாக இதனை நாங்கள் கருதுகிறோம்” என்றார்.

இந்த **‘அனைவருக்கும் முன்னேற்றம்’** என்பதுதான் சங்கிகளைக் கதற வைத்திருக்கிறது. அதனால், அறநிலையத்துறையும் திருக்கோயில்களும் செய்யும் இந்தப் புண்ணியக் காரியத்துக்கு சட்டத்தின் மூலமாகப் பல முட்டுக்கட்டைகளைப் போடப் பார்க்கிறது, ஒரு கும்பல். அவர்கள் மதத்தின் மூலம் கல்விக்கூடங்களைக் கோயிலாக்குகிறார்கள். நாம் சமூகநீதி வழியே கோயில்களை அறிவின் ஆலயமாக மாற்றுவோம்!

**...சாதனை தொடரும்**

### திருக்கோயில் நிர்வாகங்கள் நடத்தும் கல்விக்கூடங்கள்...

- கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்: **9**
  **மாணவர்கள்: 12,240**
  **ஆசிரியர்கள்: 493**
- பல்தொழில்நுட்பக் கல்லூரி: **1**
  **மாணவர்கள்: 826**
  **ஆசிரியர்கள்: 31**
- மேல்நிலைப் பள்ளிகள்: **11**
  **மாணவர்கள்: 6,581**
  **ஆசிரியர்கள்: 215**
- உயர்நிலைப் பள்ளிகள்: **5**
  **மாணவர்கள்: 1,426**
  **ஆசிரியர்கள்: 39**
- தொடக்கப் பள்ளிகள்: **6**
  **மாணவர்கள்: 606**
  **ஆசிரியர்கள்: 25**
- மெட்ரிகுலேஷன் பள்ளிகள்: **2**
  **மாணவர்கள்: 1,846**
  **ஆசிரியர்கள்: 57**
- சி.பி.எஸ்.இ. பள்ளி: **1**
  **மாணவர்கள்: 1,206**
  **ஆசிரியர்கள்: 56**
- திருமடங்களால் நடத்தப்படும் பள்ளிகள்: **6**
- அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள்: **6**
- ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள்: **3**
- நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சிப் பள்ளிகள்: **2**
- வேத ஆகம பாட சாலைகள்: **3**
- நாலாயிர திவ்யபிரபந்தப் பயிற்சிப் பள்ளி : **1**

## வாசிக்கும் அணில்!



‘பூங்கொத்துகள் வேண்டாம் புத்தகங்களைப் பரிசளியுங்கள்’ என்று சொன்னது தொடங்கி மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சி நடத்துவது வரை, வாசிப்பைப் பரவலாக்கவும் அறிவை ஜனநாயகப்படுத்தவும் திராவிட மாடல் அரசு பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் தொடர்ச்சி யாக நடைபெற்று வரும் புத்தகக் கண்காட்சிகளில், அந்தந்த பகுதிகளின் தனித்துவத்தைப் போற்றும் வகையில் அரங்கம், நினைவுப் பரிசு என அதிலும் புதுமை படைக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், நவம்பர் 16 முதல் விருதுநகர் மாவட்ட புத்தகத் திருவிழா நடைபெற்று வருகிறது. புத்தகத் திருவிழாவில் கலந்துகொள்ளும் சிறப்பு அழைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசும் கவனிக்க வைத்துள்ளது.

அணில் ஒன்று பின்னங்கால்களில் உட்கார்ந்து கொண்டு முன்னங்கால்களால் புத்தகத்தை உன்னிப்பாக வாசிப்பது மாதிரியான நினைவுப் பரிசு அது. ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் மட்டுமே காணப்படும் சாம்பல் நிற அணில்கள், காண்பதற்கு அரியவை என்பதால் 26.12.1988 அன்று அவைகளுக்கெனத் தனிச் சரணாலயம் அமைக்கப் பட்டது.

இந்தச் சாம்பல் நிற அணில்களைப் பிரபலப் படுத்தும் வகையிலும் விருதுநகரின் தனித் துவக் குறியீடாக அணிலை முன்னிறுத்தும் வகையிலும் விருதுநகர் புத்தகத் திருவிழா நினைவுப் பரிசு அமைந்துள்ளது. அணில் விரித்து வைத்திருக்கும் புத்தகத்திற்கு அடியில் ஓர் இனிமையான வாசகமும் இடம்பெற்றுள்ளது.

"இனிதாய்க் கற்போம்
இயற்கையைக் காப்போம்".

புத்தகங்களைப் பரப்பிச் சூழலையும் பாதுகாக்கும் தி.மு கழக அரசின் இதுபோன்ற பிரச்சார முன்னெடுப்பு, சமகாலத்தில் கண்டுகொள்ளாமல் இருக்கும் சிக்கல்களுக்கும் சேர்ந்த தீர்வை நமக்கு அளிக்கிறது.

## :ப்ளாஷ்பேக்



### வி.பி.சிங்கும் மாநிலக் கல்லூரியும்!

காலம் காலமாக அனைத்து நிலைகளிலும் புறக்கணிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் வேலைவாய்ப்புக்காக மண்டல் குழு பரிந்துரையை அமல்படுத்திய அப்போதைய பிரதமர் வி.பி.சிங் அவர்களுக்கு, எதிராக இந்தியா முழுவதும் எதிர்ப்பு அலைகள் தூண்டப்பட்டு, கலவரங்கள் நடைபெற்றன. அப்போது, தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அளித்த ஆலோசனையின் பேரில், 1990-ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரி மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பின் தலைவராக இருந்த நான், சென்னையின் முன்னணிக் கல்லூரிகளான நந்தனம் கலைக் கல்லூரி, புதுக் கல்லூரி, தியாகராயர் கல்லூரி, டி.பி.ஜெயின் கல்லூரி, ராணி மேரிக் கல்லூரி, காயிதே மில்லத் அரசு பெண்கள் கல்லூரி, எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி ஆகிய கல்லூரிகளின் பேரவைத் தலைவர்களை ஒருங்கிணைத்து வி.பி.சிங் அவர்களுக்கு, கலைஞர் அவர்கள் முன்னிலையில், நன்றி மற்றும் பாராட்டு விழா எடுத்தோம். இன்றைக்கு அதே மாநிலக் கல்லூரியில் சமூக நீதி நாயகருக்கு சமூக நீதிச் சரித்திர நாயகர் சிலை திறப்பதை எண்ணி மகிழ்கிறேன்.



தமிழ்மாறன்

**-செ.தமிழ்மாறன், மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர் தலைவர், தியாகராயர் நகர், சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழக முதல் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

**1957-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி, முதன்முதலாக அறிவகத்தில் தி.மு.கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்ற கட்சித் தலைவராகவும், பேராசிரியர் அவர்கள் துணைத் தலைவராகவும், கலைஞர் கட்சி கொறடாவாகவும், ஏ.கோவிந்தசாமி, எம்.பி.சுப்ரமணியம் ஆகியோர் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டமன்ற கட்சிப் பொருளாளராக சத்தியவாணிமுத்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 312




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.